**செ. கு. எண்: 214** **நாள்: 26.11.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 26.11.2018

---

**16.11.2018** அன்று 'கஜா' புயல் நாகப்பட்டினம் மாவட்டம் அருகே கரையைக் கடந்த போது, டெல்டா மாவட்டங்கள் உள்பட **12** மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு எடுத்த பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் பெருமளவு உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. எனினும், புயலின் தாக்கத்தினால், கால்நடைகள், வீடுகள், பயிர்கள், மின்கம்பங்கள், குடிநீர் குழாய்கள் போன்ற உட்கட்டமைப்புகள் பெருமளவில் சேதம் அடைந்தன.

'கஜா' புயல் கரையினை கடப்பதற்கு முன்பும், கடந்த பின்னரும், எனது தலைமையில் பல ஆய்வுக் கூட்டங்களை நடத்தி பல்வேறு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், பால், வேட்டி, சேலை, **10** கிலோ அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் பருவ மழையிலிருந்து வீடுகளை பாதுகாப்பதற்கு ஏதுவாக கூரை மேல் போடுவதற்கு தார்ப்பாய் ஷீட்டுகள் போன்றவை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டிருந்தேன்.

**எனது உத்தரவின் பேரில், நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு பிற மாவட்டங்களிலிருந்தும், ஆயிரக்கணக்கான பணியாளர்கள் அனுப்பப்பட்டு, நிவாரணம் மற்றும் மீட்புப் பணியில் இரவு பகல் பாராது, பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலேயே தங்கி, சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். அவ்வாறு தன்னலம் கருதாமல் சிறப்பாக பணியாற்றி வரும் அனைத்து துறை பணியாளர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன்.**

இந்நிலையில், 'கஜா புயலால்' பாதிக்கப்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு, நிவாரண பொருட்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த, திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தில், ஓட்டுநராக பணிபுரிந்து வந்த திரு. பாலசுப்ரமணியன் என்பவரின் மகன் திரு. பி. நாகராஜ் என்பவர் **25.11.2018** அன்று

உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

“கஜா’’ புயலின் தாக்கதினால் வீடுகள் சேதமடைந்து, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரண உதவி வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த திரு. நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நிவாரண உதவி வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்த திரு. நாகராஜ் அவர்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு, சிறப்பினமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

மேலும், உயிரிழந்த திரு. நாகராஜ் அவர்களின் குடும்பத்தினர் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு நிறுவனத்தில் வேலை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**